1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: பொதுவாக குறுவை நெல்லை கொள்முதல் செய்வது அரசாங்கத்தில் வழக்கம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையில் அறிவார்கள். இந்தக் குறுவை அறுவடையின்போது அப்படிப்பட்ட கொள்முதல் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

சின்கோனு துறைப் பணியாளர் ஊதியம்

*வினு—65 திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனு துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தல் அன்று (14-6-77) ஓட்டுப் போட்டப் போனதால் ஊதியம் அளிக்கப்படவில்லையா?

(ஆ) ஆம் எனில், ஊதியம் அளிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) ஊதியம் அளிக்கப்பட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: அந்தத் தேர்தல் முடிந்து, அந்தத் தேர்தலில் ஓட்டுப் போட்டு வந்ததற்குப் பிறகு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியம் அந்த மாதத்தில் கிடைக்கவில்லை. அந்த மாதம் அவர்கள் வாங்குகிற சம்பளத்தோடு இந்த நாள் ஊதியமும் கிடைத்திருக்க வேண்டும், ஆனல், அந்த மாதிரிக் கிடைக்கவில்லை. கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொல்கிறூர்கள். கொடுத்திருந்தால் வரவேற்கத் தக்கது. அது எப்போது கொடுக்கப்பட்டது ? அந்த ஊதியம் எவ்வளவு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்: 3-12-77 அன்று வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இது முக்கியமான நல்லதொரு எடுத்துக்காட்டு. தேர்தல் நடந்து ஓட்டுப் போடப் போனதற்கு அவர்களுக்குத் தண்டனை ஆறு மாத காலம் கழிந்த பிற்பாடு இது கொடுக்கப்பட்டிருப்பது. இது சரிதானு? ஆறு மாதங்கள் கழிந்த பிற்பாடு இந்த ஒரு நாள் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் ஏன் இப்படித் தாமதப்படுத்தினூர்கள்? இனிமேலாவது இப்படி நடக்காமல் இருப்பதற்காக அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஊதியம் அளிக்கப் பட்டு விட்டது என்பதற்குத் தகவல் இருக்கிறது. ஏன் அப்படி தாமதம் ஏற்பட்டது என்பதற்குத் தகவல் இல்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அதைப் பற்றிப் பரிசீலித்து இனிமேல் இதேபோல் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு பார்த்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெரேனியம் பயிரிடல்

* வின 66—திரு. கே. உச்சி: மாண்புமிகு செய்தி அறநிலை யத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தில் ஜெரேனியம் என்ற வாசனைத் தைல செடிகளை வளர்க்க அரசு தீவிர நடவடிக்கை ஏதேனும் எடுத் துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தமிழ்நாடு அரசு சின் கோனுத்துறை ஏறத்தாழ 15 வருடங்களாக நீலகிரியில் ஜெரே னியம் பயிரிட்டு வருகிறது. தற்போது 220 ஹெ. பரப்பளவில் ஜெரேனியம் பயிரிடப்பட்டுள்ளது. அடுத்து ஐந்து ஆண்டுகளில் மேலும் 106 ஹெ. பரப்பளவில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. கொடைக்கானல் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. உச்சி: இந்த ஜெரேனியம் நல்ல லாபம் தரக்கூடிய ஒரு விவசாயம். அதனுல் ஏராளமான வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. ஆகவே, அதை அதிகமாக பரவலாகப் பயிர் செய்வதற்கு அந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. இருந் தாலும் சின்கோனுத் துறை அரசு தரப்பில் நடத்தப்பட்டு வருகிற ஒரு துறையாகும். அதற்கு உதவியாக விவசாயிகள் பயிரிடுகிற—ஜெரேனியம் நல்ல முறையில் லாபத்தைத் தருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அது சம்பந்தமாகக் கவனித்து விவசாயிகளுக்கு தக்க ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: இந்த சின்கோனுத் துறையில் பணியாற்றுகிற பலர் தற்காலிக ஊழியர்களாக ஆறு ஏழு ஆண்டு களாக வேலை வாங்கப்படுவதாகத் தெரிய வருகிறது. அவர்களை நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? மழை காலங்களில்